# மாநில சமச்சீர் வளர்ச்சி நிதித் திட்டம்

# 2013 - 14

## தூத்துக்குடி மாவட்டத்தில் பசுமைக்குடில் அமைத்தல்

தூத்துக்குடி மாவட்டத்தில் SBGF திட்டத்தின்கீழ் 10 பசுமைக்குடில்கள் அமைக்க 113.58 இலட்சம் மதிப்பீட்டில் 66.66% அரசு மானியமாகவும், 33.33% விவசாயிகள் பங்குத் தொகையாகவும் கொண்டு அமைக்கப்பட்டது. இத்திட்டம் கயத்தார், கோவில்பட்டி, விளாத்திகுளம் மற்றும் புதூர் ஆகிய நான்கு வட்டாரங்களில் 10 பசுமைக்குடில்கள் அமைக்கப்பட்டது.

**பசுமைக்குடில் சாகுபடி**

பாதுகாப்பான சூழ்நிலையில் பயிர்களை வளர்ப்பதற்கான உள்ளுறைச் சட்டங்களின் கீழ் ஒளி புகும் இயல்புள்ள மூடகமாகப் பயன்படுத்தி உருவாக்கப்படும் கட்டமைப்புகளே பசுமைக் குடில்கள் ஆகும். வருடம் முழுவதும் அல்லது தேவைக்கேற்ப் பயிர் உற்பத்திக்கு வித்திடும் ஏதுவான நுட்ப கால நிலையினை உருவாக்குவதற்க இத்தொழில்நுட்பம் பயன்படுகிறது. இதில் வெப்பம், வெளிச்சம், கரிய அமில வாயு அளவு, காற்றின் ஈரப்பதம், நீர்த்தேவை, பயிர் சத்துகளின் தேவை, நோய் கட்டுப்பாடு ஆகியவை கட்டுப்படுத்தப்படுகிறது.

பசுமைக் கூடத்தின் உற்பத்தி காலம் குறைந்ததாகவே இருக்க வேண்டும். அதன் செயல்கள் கீழ்க்கண்டவாறு அமையும்.

1. நாற்றங்காலில் நாற்று வளர்த்தல்.
2. மலர்ப்பயிர்களை வீரிய ஒட்டு விதை உற்பத்திகாக பசுமைக் கூடத்தில் வளர்த்தல்.
3. மலர் சாகுபடி.
4. பூந்தொட்டிகளில் செடி வளர்த்தல்.

**பயன்பாட்டு விவரம்:**

| திட்டம் | விவசாயிகளின் பங்குத் தொகை (இலட்சத்தில்) | SBGF பங்களிப்பு தொகை (இலட்சத்தில்) | மொத்த மதிப்பீடு (இலட்சத்தில்) | செயல்படுத்தும் அலுவலருக்கு விடுவிக்கப்பட்ட SBGF பங்குத் தொகை (இலட்சத்தில்) | பணிக்கான SBGF செலவு தொகை (இலட்சத்தில்) | மீதித் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| பசுமைக் குடில்கள் அமைத்தல் | 37.86 | 75.72 | 113.58 | 75.72 | 75.72 | இல்லை. |



DRIPPERS INSTALLED AND BED PREPARTION COMPLETED STRUCTURE



COMPLETED POLYHOUSE



SAND FILTER INSTALLED IN POLYHOUSE





CUCUMBER PLANTED IN THE POLYHOUSE VISIT BY DPO AND AD (HOR)

